<u>சுருக்கம்</u>

நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள பயணியர் மாளிகை மற்றும் ஆய்வு மாளிகையின் வாடகையினை திருத்தி அமைத்தல்—ஆணை வெளியிடப்படுகிறது

நெடுஞ்சாலைத் (எச்.என்.1) துறை

அரசாணை (நிலை) எண் 275 நாள் 22.12.2006.

படிக்கவும்—

1. அரசாணை (நிலை) எண் 441, பொதுப்பணித்துறை, நாள் 22.03.1988.
2. தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கடித எண் 35207/சாலை3/02, நாள் 12.01.2004, 30.03.2004 மற்றும் 07.07.2004

----

<u>ஆணை:—</u>

நெடுஞ்சாலைத் துறையில் பராமரிக்கப்பட்டுவரும் பயணியர் மாளிகை மற்றும் ஆய்வு மாளிகைகளுக்கான வாடகை மேலே படிக்கப்பட்ட அரசாணையின்படி தற்பொழுது கீழ்கண்டவாறு வசூலிக்கப்பபட்டுவருகின்றது .

| வ.எண் | தங்குபவர்கள் விவரம் | குளிர் சாதன வசதியுடன் | குளிர் சாதன வசதி அல்லாமல் | |
|---|---|---|---|---|
| | | | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு |
| 1. | தனி நபர் | ரூ.10 | ரூ.4 | ரூ.2 |
| 2. | ஒவ்வொரு கூடுதல் நபருக்காக (4 கூடுதல் நபர் வரை) | ரூ. 5 | ரூ. 2 | ரூ. 1 |

இவ்வாறு வசூல் செய்யப்படும் வாடகை மிகவும் குறைவாக உள்ளதால், அத்தொகையினைக் கொண்டு ஆய்வு மற்றும் பயணியர் மாளிகையின் பராமரிப்பு செலவை ஈடு செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, பயணியர் மாளிகை மற்றும் ஆய்வு மாளிகையின் வாடகையினை உயர்த்தி ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (பொது) கோரியுள்ளார்.

3. தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலை அவர்களின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்தது. நெடுஞ்சாலைத் துறையின் ஆய்வு / பயணியர் மாளிகையின் தினசரி வாடகையை கீழ்கண்டவாறு திருத்தி நிர்ணயம் செய்து அரசாணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு திருத்திய தினசரி வாடகை இவ்வாணை வெளியிடும் நாள் முதல் அமலுக்கு வரும்.

| வ.எண் | தங்குபவர்கள் விவரம் | அறைக்கு ஒருநாள் வாடகை | | |
|---|---|---|---|---|
| | | குளிர் சாதன வசதி உள்ளது | முதல் வகுப்பு குளிர்சாதன வசதி இல்லாதது | இரண்டாம் வகுப்பு குளிர்சாதன வசதி இல்லாதது |
| 1. | அரசு அலுவலர் | ரூ. 75 | ரூ.50 | ரூ. 30 |
| 2. | அரசு அலுவலர் கூடுதல் நபர் ஒவ்வொருவருக்கும் | ரூ. 50 | ரூ. 25 | ரூ. 20 |
| 3. | பிற தனி நபர் ஒன்றுக்கு | ரூ.200 | ரூ.100 | ரூ 60 |
| 4. | தனியார் கூடுதல் நபர் ஒவ்வொருவருக்கும் | ரூ.100 | ரூ.50 | ரூ.30 |

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண் 77515/PW-1/06, நாள் 18.12.2006 இசைவுடன் வெளியிடப்படுகிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை, சென்னை.5
அனைத்து தலைமைப் பொறியாளர்கள், நெடுஞ்சாலைத் துறை
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மாநில கணக்காயர், சென்னை.18/35
நகல்
நிதித் (பொ.ப. 1 / நிதியாதாரம் 1& 2) துறை, சென்னை.9
பொதுப் பணித்துறை, சென்னை.9
செய்தி (ம) மக்கள் தொடர்பு துறை, சென்னை.9
NIIC , தலைமைச் செயலகம், சென்னை.9
இ.கோ./உதிரிப்படிகள்

/உத்தரவுப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.